மோட்டார் வாகன விபத்து கோருரிமை சிறப்பு சார்பு நீதிமன்றம், கோயமுத்தூர்

முன்னிலை : திரு.K. முனிராஜா, பி.எஸ்ஸி., பி.எல்.,
மோட்டார் வாகன விபத்து கோருரிமை சிறப்பு நீதிமன்ற சார்பு நீதிபதி,
கோயமுத்தூர்.

2021-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 02-ம் தேதி **புதன்கிழமை**
(**திருவள்ளுவராண்டு**, 2051 **சார்வரி வருடம்**, **கார்த்திகை திங்கள்** 16-ம் **நாள்**)

CNR No.TNCBOF-000005-2009

I.A. No.1/2020
in
M.C.O.P.699/2017

நேஷனல் இன்சூரன்ஸ்
கம்பெனி லிமிடெட், ...
மனுதாரர்

- **Vs**. -

டி.கமலா தர்மலிங்கம் ..
எதிர்மனுதாரர்கள்

இவ்வழக்கு 23.11.2021 அன்று என் முன் இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.கோபால கிருஷ்ணன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.என்.விஜயகுமார் அவர்கள் ஆஜராகியும், ஆவணங்கள் மற்றும் சாட்சிகள் பரிசீலித்தும் இதுநாள் வரை இந்த நீதிமன்றத்தின் ஆய்வில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்:

உத்தரவு

அசல்மனு உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 114, 151, 152 மற்றும் 153 பிரிவுகளின் படி அசல் கோரிக்கை மனுவின் பெயரிலான உத்தரவில், மனுதாரருக்கு செலுத்தப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையை

2 ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டும், 3 ம் மனுதாரரைப் பொறுத்து மனுவை தள்ளுபடி செய்தும் உத்தரவிடக்கோரி மனுதாரர்/3 ம் எதிர்மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனு பிரமாண பத்திரிக்கையின் சுருக்கம்</u>

அசல் விபத்து கோரிக்கை மனு எதிர்மனுதாரர்/ மனுதாரரால் சாலை விபத்து இழப்பீடு கோரி தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி மனுதாரர் விபத்து சமயத்தில் பொள்ளாச்சி - கோயமுத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் கார் ஓட்டுநர் வாகனத்தை ஓட்ட தான் கார் பதிவு எண் TMK-7222 வாகனத்தில் பயணம் செய்ததாகவும் அப்போது எதிர்திசையில் வாகனத்தை ஓட்டி வந்த 1 ம் எதிர்மனுதாரர் பதிவு எண் TN-41-F-7734 இரு சக்கர வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வந்து காரின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி 1 ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனத்திற்கு விபத்து சமயம் விபத்து காப்பீடு இல்லை என்பதை மனுதாரர் தனது மனுவில் காலம் எண்.16 ல் மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். மேலும் மேற்படி காலம் எண்.16 ல் மனுதாரர் இந்த மனுதாரர்/3 ம் எதிர்மனுதாரர் அவர் பயணம் செய்த கார் பதிவு எண் TMK-7222 காப்பீட்டாளர் 3 ம் எதிர்மனுதாரரை சம்பிரதாய அடிப்படையில் சேர்த்துள்ளதாகத்தான் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்த வழக்கு முழுமையாக இத்தீர்ப்பாயத்தால் விசாரிக்கப்பட்டு இந்த விபத்தானது பதிவு எண்.TN-41-F-7734 இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த 1 ம் எதிர்மனுதாரரின் அதிவேகம், அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்று உத்தரவு பத்தி-3,4 மற்றும் 6 ல் பிரச்சனை எண்-1 க்கு தெளிவாக தீர்வு காணப்பட்டுள்ளது. இருப்பினும் உத்தரவின் இறுதிப் பகுதியில் 3 ம் எதிர்மனுதாரரை மனுதாரருக்கான இழப்பீடு தொகையை காரின் காப்பீட்டாளர் என்ற முறையில் செலுத்தியபிறகு 2 ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொள்ள

வேண்டியது என்று தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கனவே இறுதி தீர்மானிப்பில் 1ம் எதிர்மனுதாரரும் அந்த வாகனத்தின் உரிமையாளர் மட்டுமே பொறுப்பு என்ற வகையில் தற்போது அதற்கு தொடர்பில்லாத இம்மனுதாரரை தீர்ப்பாணைத் தொகையை செலுத்த உத்தரவின் இறுதிப்பகுதியில்மட்டும் தீர்மானிப்பிற்கு மாறாக மறு ஆய்வு செய்து இழப்பீடு தொகையை 2ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டுமென்றும், 3ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து விடுவிக்கப்பட்டு இம்மனு தள்ளுபடி செய்ய உத்தரவிடுவது அவசியமும் நியாயமும் ஆகும். எனவே இம்மனு அனுமதிக்கத்தக்கதாகும்.

3. <u>எதிர்மனுதாரர்/மனுதாரரின் எதிர் உரை சுருக்கம்:</u>

மனுபிரமாண பத்திரிக்கையில் மனுதாரர்கள் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது. இம்மனுதாரர்/3ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி ஏற்புடையதல்ல. அசல் கோரிக்கை மனுவில் இத்தீர்ப்பாயம் இறுதியாக தீர்மானிக்கப்பட்ட பிறகு அதில் பாதகம் ஏதேனும் இருந்தால் மேல்முறையீடு தான் செய்ய வேண்டும். இதே நீதிமன்றத்தில் மற்றும் ஒரு உத்தரவை பிறப்பிக்க இம்மனு தாக்கல் செய்ய இயலாது. ஏற்கனவே இந்நீதிமன்றம் தெளிவாக தனது உத்தரவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு மாறாக இம்மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் அமைந்துள்ளதால் இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கதாகும

<u>தீர்வு</u>:

4. மனுதாரர் மனுவில் கோரியுள்ளதுபோல் அசல்மனு உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 114, 151, 152 மற்றும் 153 பிரிவுகளின் படி அசல் கோரிக்கை மனுவில் மனுதாரருக்கு செலுத்தப்பட வேண்டிய இழப்பீட்டுத்

தொகையை 2 ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டும், 3 ம் மனுதாரரைப் பொறுத்து மனுவை தள்ளுபடி செய்தும் உத்தரவிடக்கோரி மனுதாரர்/3 ம் எதிர்மனுதாரரால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இப்பிரச்சனையின் தீர்வுக்குரிய பொருண்மையாகும்.

5. அசல் வழக்கு கோப்புகளை ஆராய்ந்து பார்க்கும்போது அசல் வழக்கு, எதிர்மனுதாரர் /மனுதாரர் கமலா தர்மலிங்கத்தால் அவருக்கு கடந்த 29.06.2008 ம் தேதி மாலை 5.00 மணிக்கு அவரது காரை அவரது ஓட்டுநர் ஓட்ட பதிவு ண் TMK-7222 பிரிமியர் பத்மினி காரில் தென்வடல் பொள்ளாச்சி - கோயமுத்தூர் தேசிய நெடுஞ்சாலையில் பயணம் செய்த போது எதிர்திசையில் பதிவு எண் TN-41-F-7734 கொண்ட இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த 1 ம் எதிர்மனுதாரரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டு தான் மனுவில் குறிப்பிட்டுள்ள காயங்களும், இழப்புகளும் ஏற்பட்டதாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த கோரிக்கை மனு பத்தி 5 ல் 1 ம் எதிர்மனுதாரருக்கு எதிராக முதல் தகவலறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பத்தி-6 1 ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த இரு சக்கர வாகனத்தின் உரிமையாளர் 2 ம் எதிமனுதாரர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 1,2 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவே கூட்டாகவோ மனுதாரருக்கான இழப்பீட்டுத் தொகையை செலுத்த கடமைப்பட்டவர்கள் என்று குறிப்பிபடப்பட்டுள்ளது,

"**The insurer of the car TMK**-7222 **has been added as the third respondent herein**, **as a formal party**, **though no claim as prefered as against R**3."

என்று மிகத் தெளிவாக இந்த விபத்து இழப்பீட்டுத் தொகை 1,2 எதிர்மனுதாரர்கள் தான் செலுத்த வேண்டுமென்றும் 3 ம் எதிர்மனுதாரருக்கு எதிராக எந்த பரிகாரமும் கோரவில்லை என்றும் சம்பிரதாய அடிப்படையில்

குறிப்பிடப்பட்டுள்ளது என்பது அசல் கோரிக்கை மனு பத்தி-6 ல் தெளிவாகிறது. மேலும் மேற்படி மனு காலம் எண்-16 ல்,

“Formal party”

National Insurance company limited division II No.16 State Bank Road, Coimbatore-18.

Policy No.650200/31/08/6700000802..valid upto 07.06.09

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இந்த வழக்கில் இம்மனுதாரர்/3 ம் எதிர்மனுதாரருக்கு எதிராக பரிகாரம் ஏதும் கோரப்படாத சம்பிரதாய நபராக மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளார் என்பது தெளிவு.

6. மேலும், மேற்படி கோரிக்கை மனு பத்தி-10 ல் பரிகாரம் கோரும் a)ல் இவ்விபத்திற்கான இழப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/-த்தை 1,2 எதிர்மனுதாரர்கள் செலுத்த வேண்டுமென்றுதான் பரிகாரம் கோரப்பட்டுள்ளது. அதிலும் இந்த 3 ம் எதிர்மனுதாரர் பரிகாரம் வழங்கக் கூடியவர் என்ற அடிப்படையில் சேர்க்கப்படவில்லை. இந்நிலையில் தான் இந்த வழக்கில் இந்நீதிமன்றம் இறுதியாக அசல் உத்தரவு 20.09.2018 அன்று பிறப்பித்துள்ளது. அதில் இறுதிப்பகுதியில் மனுதாரருக்கான இழப்பீட்டுத் தொகையை 2,3 எதிர்மனுதாரர்கள் செலுத்த வேண்டுமென்றும், முதலில் 3 ம் எதிர்மனுதாரர் மேற்படி தொகையை செலுத்திவிட்டு பின்பு 2 ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொள்ள வேண்டியது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

7. மேற்படி அசல் உத்தரவில் பிரச்சனை எண்.1 ல் 1 ம் எதிர்மனுதாரரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால் மட்டுமே விபத்து ஏற்பட்டதாக இறுதியாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்திற்கு 2 ம் எதிர்மனுதாரர் உரிமையாளர் ஆனால் 3 ம் எதிர்மனுதாரர் மேற்படி வாகனத்தின் காப்பீட்டாளர் இல்லை. மாறாக மனுதாரர் பயணம் செய்த காரின்

காப்பீட்டாளர் அவருக்கெதிராக அசல் உத்தரவில் எந்த தீர்மானமும் இல்லை. ஆனால் அசல் உத்தரவின் தீர்மானிப்பிற்கு முற்றிலும் மாறாக இறுதி உரையில் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டுத் தொகையை செலுத்த வேண்டுமென்றும் அதை 2ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக் கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி உத்தரவு மனுதாரர் கோரிக்கைக்கு எதிராக மற்றும் நீதிமன்ற தீர்மானிப்பிற்கும் எதிராக தவறான வகையில் பிழையின் காரணமாக அவ்வாறு 2ம் எதிர்மனுதாரருக்கான இழப்பீடு செலுத்தும் பொறுப்பினை 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டு விட்டதாகத்தான் உத்தரவு மற்றும் கோப்புகளின் அடிப்படையில் தெரியவருகிறது. மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. பிரச்சனையின் தீர்மானிப்பு தெளிவாக சொல்லப்பட்ட நிலையில் இறுதி உத்தரவில் தவறாக பொறுப்பினை 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக 2ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டாளர் என்ற அனுமானத்தில் தவறுதலாக குறிப்பிடப்பட்டுவிட்டது என்றுதான் கருதத் தோன்றுகிறது. எனவே மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்பதும் தெளிவாகிறது.

8. இந்நிலையில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள உரிமையியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 114,151,152 மற்றும் 153 பிரிவின் படியான மனு அனுமதிக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் மறு ஆய்வு அடிப்படையில் விடுவிக்க இயலுமா? மற்றும் 2ம் எதிர்மனுதாரருக்கான பொறுப்பினையை அசல் உத்தரவில் தீர்மானிக்கப்பட்ட பிரச்சனையின் இறுதி உத்தரவின் படி மேற்படி பிரிவுகள் மனுதாரருக்கு உதவிகிறா என்று ஆராய்வதன் அடிப்படையில் இது தொடர்பாக கீழ்கண்ட முன்தீர்ப்புகளை ஆராய்வது அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

IN THE HIGH COURT OF MADRAS

C.R.P.NPD.No.2051 **of** 2010 **and M.P.No.**1 **of** 2010

Decided on:12.11.2010

The united india insurance company ltd

...**Appellants**

-**Vs**-

Thirumalai and others

...**Respondent**

10. "On a careful perusal of the said judgment of the Hon'ble Apex Court, the lower court could have corrected its judgment by way of review, if it is directed by any one of the points stated in the judgment. As far as this case is concerned, this court could see that the policy stated have been entered in between the Petitioner and the 2nd Respondent. And the owner of the vehicle do not have the insurance cover on the date of accident. If it is found to be correct, naturally the judgment passed by the lower court should have been reviewed."

மேற்கண்ட முன்தீர்ப்பில் நீதிமன்றத்தின் தவறுகையில் எந்த ஒரு தரப்பிலும் பாதிக்கப்படாமலும் நீதிமன்றங்கள் மறு ஆய்வின் மூலமாக தவறுகளை சரி செய்து கொள்ள அதிகாரம் உண்டு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

IN THE COURT OF MADRAS (MADURAI BENCH)

C.R.P.(PD) (MD) No.898 of 2021

Decided on:27.10.2021

M.C.S.Kandasamy servai

...Appellants

The Revenue Divisional Officer,
District collector office,
Tiruchirappalli

...**Respondent**

15.”Moreover, it is pertinent to note that the principle behind the provision of Section 152 CPC, is a maxim “actus curiae neminem gravabit” i.e., nobody shall be prejudiced by an Act of Court.”

(iii)Master Construction co.(p.)Ltd.v.State of Orissa reported in Manu/SC/0304/1965:AIR 1966 SC 1047, the Hon'ble Apex court has explainted the words “accidental slip or omission as an error due to a careless mistake or omission unitentionally made”and it is further observed that “there is another qualification namely, such an error, shall be apparent on the face of the record, that is to say, it is not an error which depends for its discovery, elaborate arguments on questions of fact or law.”

16.As rightly contended by the learned counsel for the revision petitioner, even if the court is of the view that section 152 cannot be applied, then under inherent powers available under section 151 CPC, the judgments and decrees can be amended as the trial court has failed to incorporate the staturory amounts which are mandatorily payable.”

மேற்கண்ட முன்தீர்ப்புகளிலும் தவறுகளை அல்லது விடுபடுதலை அல்லது ஏதேனும் சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதை தீர்ப்புகளில் சேர்க்கவும் நீதிமன்றத்தின் தவறுகையின் காரணமாக எந்த ஒரு தரப்பினரும் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

9. எனவே மேற்கண்ட முன்தீர்ப்புகள் இம்மனுவிற்குமிகச்சரியாக பொருந்ததத்தக்கதாகும். அசல் கோரிக்கை மனுவில் 2ம் எதிர்மனுதாரருக்கு மட்டுமே இழப்பீட்டுத் தொகை செலுத்தும் பொறுப்பு உள்ளது என்று தீர்மானித்துவிட்டு, உத்தரவின் இறுதிப்பகுதியில் அந்த தீர்மானிப்பிற்கு மாறாக சம்மந்தமே இல்லாமல் 3ம் எதிர்மனுதாரரை பொறுப்புக்குள்ளாக்கியிருப்பது நீதிமன்றத்தின் தவறுகை என்பது தெளிவாதாலும் அவ்வாறு சுட்டிக்காட்டப்பட்ட தவறுகை புதிய கண்டுபிடிப்பு என்ற வகையில் பிரிவு 114 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் படி மறு ஆய்வு செய்தும் பிரிவு 152படி தீர்ப்புரையை திருத்த இயலாது என்று மேற்கண்டமுன்தீர்ப்பின் படி தீர்மானித்தாலும் நீதியின் நலன் காக்க பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தில் இந்நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட உள்ளார்ந்த அதிகாரத்தை பயன்படுத்தி நீதிமன்ற தவறுகையை சரிசெய்வது நீதிக்கு உகந்ததது என்றும் அந்த வகையில் இம்மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு அசல் எம்சிஓபி நெ.699/2017வழக்கில் மனுதாரருக்கான இழப்பீட்டுத் தொகையை செலுத்தும் பொறுப்பு 2ம் எதிர்மனுதாரருக்கு மட்டுமே உள்ளது என்று தீர்மானித்தும், 3ம் எதிர்மனுதாரருக்கு அவ்வாறு இழப்பீடு தொகை செலுத்தும் பொறுப்பு ஏதும் இல்லை என்பதால் 3ம் எதிர்மனுதாரர் இந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டும் (Exonarate)உத்தரவிடத்தக்கதாகும். மேலும் பிரிவு 153ன் படியும் மேற்கண்டவாறு தீர்ப்பின் பலனை அசல் மனுதாரர் பெறவும் மற்ற தரப்பினர் தேவையின்றி பாதிக்கப்படுவதை தவிர்க்கவும், பொறுப்பினை மேற்கண்டவாறு அசல் உத்தரவின் இறுதிப்பகுதியில் உத்தரவின் பகுதியை திருத்தம் செய்ய தீர்மானித்து அவ்வாறே உத்தரவிடப்படுகிறது.

10. **<u>இறுதி முடிவு</u>**:-

இறுதியாக, இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு உத்தரவிடப்படுகிறது.

1.அசல் கோரிக்கை மனுவில் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி மனுதாரருக்கான இழப்பீடு தொகையை 2 ம் எதிர்மனுதாரர் மட்டுமே செலுத்த வேண்டும் என்றும்,

2.இம்மனுதாரர்/3 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தொகை செலுத்தும் பொறுப்பு ஏதும் இல்லை என்பதால் அவரை இவ்வழக்கிலிருந்து விடுவித்து(Exonarate)உத்தரவிட்டும்,

3.மேற்கண்டவாறு அசல் உத்தரவு மற்றும் இறுதி உத்தரவின் இறுதிப் பகுதிகளை திருத்தம் செய்யவும் உத்தரவிடப்படுகிறது.

4.செலவுத் தொகையைப் பொறுத்து உத்தரவு இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2021 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 02-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

K MUNIRAJA
Digitally signed by K MUNIRAJA
Date: 2021.12.02 19:25:50 +0530

மோட்டார் வாகன விபத்து கோருரிமை
சிறப்பு நீதிமன்ற சார்பு நீதிபதி,
கோயமுத்தூர்.

<u>இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.</u>

K MUNIRAJA

Digitally signed by K MUNIRAJA
Date: 2021.12.02 19:25:58 +0530

மோ.வா.வி.கோ.சி.சா.நீ.,
கோவை.

வரைவு / அசல் உத்தரவு:
இ.ம.எண்.01/2020
எம்.சி.ஓ.பி.699/2017
தேதி: 02.12.2021.
கோவை.